3E PROJECT
ENABLE ENERGY EFFICIENCY

# மின்சக்தி திறன்பாட்டு யதார்த்தநிலை அறிக்கை: விளக்குகள்

வியாபாரத்தில், விளக்குகளை எரிப்பது மின்சக்தி செலவுகளில் ஓர் குறிப்பிடத்தக்க அளவை ஏற்படுத்துகிறது மேலும் இது தான் நீங்கள் மிக சிறந்த முறையிலும் மிக எளிதாகவும் மின்சக்தியையும் பணத்தையும் மிச்சப்படுத்த முடிகிறதோர் பகுதியாகும். ஒரு காலாண்டில், மின்சக்தி செலவுகளுக்காக $2000 செலவழிக்கிறதோர் அலுவலகம், விளக்குகளுக்காகவே அந்தக் காலாண்டில் முறையாக கிட்டத்தட்ட $800 செலவழித்து விடுகிறது. நீங்கள், ஓர் மின்சக்தி தணிக்கையாளர் மற்றும் உரிமம் பெற்ற மின் தொழில்நுட்பப் பணியாளர் ஆகியோரோடு சேர்ந்து கணக்கிட்டுப் பார்ப்பீர்கள் என்றால், இச்செலவில் 50% அளவு வரையில் நீங்கள் மின்சக்தியைத் திறம்பட்ட முறையில் உபயோகிப்பதன் வாயிலாக மிச்சப்படுத்தி விடலாம்.

## இதனைச் செய்வதற்கான விரைவான மற்றும் எளிதான வழிகள்

- **உபயோகத்தில் இல்லாத விளக்குகளை அணைத்து வையுங்கள்**. இது எங்களுக்குத் தெரியாதா, என்பதாகவே இது தோன்றும், ஆனால் பெரும்பாலும் நாம் இதைச் செய்ய மறந்து தான் போய் விடுகிறோம். ஒரு பகுதியிலிருந்து மக்கள் வெளியேறும் போது, அங்குள்ள விளைக்குகளை அணைத்துவிட்டுச் செல்வதற்கு அவர்களுக்கு நினைவூட்ட, புரிந்து கொள்ள எளிதான அடையாளங்களை வைப்பது அவர்களுக்கு உதவி புரியும். இதனைத் தானாகவே செய்து விடுவதற்கு, ஒரு சென்சார் சுவிட்சைப் பயன்படுத்துவது மிகப் பெரிய குறைந்த-செலவு கொண்டதோர் வழியாகும்.

- **இயற்கை வெளிச்சத்தை உபயோகித்துக் கொள்ளுங்கள்**. ஜன்னல் மறைப்புகளை திறந்து வைப்பது, ஸ்கைலைட்களை அமைப்பது மற்றும் ஜன்னல்களை மறைத்து வெளிச்சம் வராமற் தடுப்பவற்றை அகற்றுவது போன்ற எளிதான காரியங்கள், மின்சார விளக்கையே சார்ந்திருக்கும் நிலையைக் குறைத்துவிடக் கூடும்.

- **விளக்குகளை சுத்தமாக வைத்துக் கொண்டு, தூசி படியாமல் பார்த்துக் கொள்ளுங்கள்**. அழுக்கடைந்த விளக்குகள் மற்றும் விளக்கு பாகங்கள், பிரகாசத்தை கிட்டத்தட்ட பாதியளவிற்குக் குறைத்துவிட முடியும். தொடர்ந்து அவ்வப்போது விளக்குகளை சுத்தம் செய்து வைப்பது, குறைந்த எண்ணிக்கையிலான விளக்குகளை உபயோகித்தே அதேயளவு பிரகாசமான வெளிச்சத்தைப் பெறுவதற்கு உங்களுக்கு வழி ஏற்படுத்திக் கொடுக்கும்.

- **உங்கள் ஃப்ளூரெஸ்செண்டுகளில் இருந்து ஒருசில பல்புகளை அகற்றுங்கள்**. உங்களிடம் இரண்டு ஃப்ளூரெஸ்செண்ட் பல்புகள் பொருத்துகிற ஃபிட்டிங்குகள் இருந்தால், அதிகளவிற்கு வெளிச்சம் தேவைப்படாத, சுவர் ஓரமாக உள்ள மற்றும் அலமாரிகளுக்கு நேர் மேலாக உள்ளது போன்ற பகுதிகளில் உள்ள ஒவ்வொரு ஃபிட்டிங்கிலுமிருந்து ஒரு பல்பை அகற்ற முயற்சியுங்கள். மற்ற பல்போ, தானாகவே நன்றாக வேலை செய்து விடும்.

- **அதிகபட்ச உட்புற பிரதிபலிப்பு**. சுவர்களிலும், மேற்கூரைகளிலும் இளநிற வர்ணங்களைப் பூசி, அடர்நிறமுள்ள மேற்பரப்புகளை சுத்தமாக வைத்து, வெளிச்சம் பிரதிபலிப்பதை அதிகப்படுத்துங்கள்.

- **இரவு நேர வெளிச்சத்தைக் குறையுங்கள்.** எப்படியிருந்தாலும், இரவு நேரத்தில் டிஸ்பிளே சைன்களும், டிஸ்பிளே கேஸ்களும் முழுமையாக வெளிச்சமூட்டப்பட வேண்டியதில்லை.

- **குண்டு பல்புகள் அனைத்தையும் சிஎஃப்எல் பல்புகளாக மாற்றி விடுங்கள்.** சிஎஃப் எல் பல்புகள், அவை உபயோகிப்பதில் 80% குறைவான மின்சக்தியையே உபயோகித்து, அவற்றைப் போல் 10 மடங்கு நீண்ட காலத்திற்கு உழைக்கின்றன.

### மின்சக்தி மிச்சப்படுத்தும் சாதனங்கள்


எல்ஈடி


எல்ஈடி


டீ8-டீ5 ஃப்ளூரெஸ்செ


எல்ஈடி


சிஎஃப்எல்

தி ஹில்ஸ் ஹால்ராய்டு பர்ரமட்டா மைக்ரண்ட் ரிசோர்ச் செண்டர் நிர்வகிக்கிற 3ஈ திட்டத்திற்காக, ஸ்டெப்லைட் பிரை. லிட். நிறுவனம் தயாரித்த உண்மைநிலை அறிக்கை. இத்திட்டம், மின்சக்தியைத் திறம்பட உபயோகிப்பது குறித்த தகவல் உதவிகள் திட்டத்தின் (Energy Efficiency Information Grants Program) ஓர் பகுதியாக, பருவநிலை மாற்றம் மற்றும் மின்சக்தியைத் திறம்பட உபயோகித்தலுக்கான துறையிலிருந்து (Department of Resources, Energy & Tourism) நிதியுதவி பெற்றது. இங்கே வெளிப்படுத்தியுள்ள கருத்துக்கள், ஆஸ்திரேலிய பொதுநலத்தின் (Commonwealth of Australia) கருத்துக்களாக இருக்க வேண்டிய அவசியமில்லை, மேலும் இங்குள்ள எந்தவொரு தகவல் அல்லது ஆலோசனைக்கும் ஆஸ்திரேலிய பொதுநல அமைப்பு பொறுப்பேற்றுக் கொள்வதில்லை. 221112

Australian Government
Department of Resources, Energy and Tourism

## மின்சக்தியைத் திறம்பட்ட விதத்தில் உபயோகிப்பதில் முதலீடு செய்யுங்கள்

- **மேக்னெட்டிக் பல்லாஸ்ட் லேம்ப்களை, எலெக்ட்ரானிக் பல்லாஸ்ட் வகைகளாக மாற்றி விடுங்கள்**. எலெக்ட்ரானிக் பல்லாஸ்டுகளை உபயோகிக்கிற விளக்குகள் 20% குறைவான சக்தியையே உபயோகிக்கின்றன.

- **குறைந்த பிரதிபலிப்பு கொண்ட லைட் ஃபிட்டிங்குகளை, அதிக பிரதிபலிப்பு கொண்டவையாக மாற்றி விடுங்கள்**. நன்கு வடிவமைக்கப்பட்ட பிரதிபலிப்பான்கள் கொண்ட லைட் ஃபிட்டிங்குகளை அமைப்பது, வெளிவரும் வெளிச்சத்தை, 40% அளவிற்கு அதிகரிக்கச் செய்யலாம், மேலும் அதுவே மற்ற விளக்குகளை முற்றிலுமாக அணைத்து விடுவதற்கும் வழிவகுக்கலாம்.

- **லைட்டிங் கண்ட்ரோல்களை அமையுங்கள்**. ஆளிருப்பதைக் கண்டறியும் சென்சார்கள், வெளிச்சமிருப்பதைக் கண்டறியும் சென்சார்கள் மற்றும் டிம்மர்கள் ஆகியவை தேவையில்லாத விளக்கு வெளிச்சத்தைக் குறைக்க உதவுகின்றன. நன்கு-வடிவமைக்கப்பட்ட லைட்டிங் கண்ட்ரோல்கள், விளக்குகளில் உபயோகிக்கும் மின்சக்தியில் 80% அளவிற்கு மிச்சப்படுத்தி விட முடியும்.

- **பல விளக்கு சுவிட்சுகளை அமையுங்கள்**. சில பகுதிகள், மற்ற பகுதிகளை விட அதிகமான அளவிற்கு உபயோகிக்கப்படுகிற பட்சத்தில், மற்ற பகுதிகளைப் பாதிக்காமலேயே, உபயோகமில்லாத பகுதிகளில் உள்ள விளக்குகளை அணைத்து விட முடிகிற வகையில், பல விளக்குச் சுவிட்சுகளை அமையுங்கள்.

- **மின்சக்தியைத் திறம்பட உபயோகிக்கும் தயாரிப்புகளுக்கு மாறுங்கள்**. உங்கள் வியாபாரத்திற்கு இது இலாபகரமானதா இல்லையா என்பதை ஓர் மின்சக்தி தணிக்கை தீர்மானித்துவிடும். 3eproject.org.au என்ற வலைத்தளத்தில், ஓர் இலவச மின்சக்தி தணிக்கைக்குப் பதிவு செய்யுங்கள்.

## உங்களுக்குத் தெரியுமா?

- மின்சார விளக்குகளை உபயோகிக்க வேண்டிய தேவையை, இயற்கை வெளிச்சமே 30% அளவிற்குக் குறைத்துவிட முடியும்.

- பெரும்பாலான விளக்குகளை, அவை சீர்கேடு அடைவதற்கு முன், 5000 தடவைகள் வரை ஆன் செய்யவும், ஆஃப் செய்யவும் முடியும்.

- மோசமான வகையில் வடிவமைக்கப்பட்ட லைட் ஃபிட்டிங்குகளில், உபயோகமான விளக்கு வெளிச்சத்தில் 50% அளவு வரை வீணாகிப் போய்விடக் கூடும்.

> "கடையில் உள்ள அனைத்து விளக்குகளையும், மின்சக்தியைத் திறம்பட உபயோகிக்கும் விளக்குகளாக மாற்றி விட்டோம், அதிலேயே மின்சக்தி செலவு ஒரு காலாண்டிற்கு $300 அளவிற்குக் குறைந்து போய் விட்டது. நான் ரொம்பவும் சந்தோஷமாக இருக்கிறேன்!"
>
> \- சில்வியா, ஃபேர்ஃபீல்டு ஹெயிட்ஸ்

### மின்சக்தி மிச்சப்படுத்தும் சாதனங்கள்



சிஎஃப்எல்



இண்டக்ஷன்



எல்ஈடி



எல்ஈடி ஃப்ளட்



எல்ஈடி டிஸ்பிளே

மேலும் தகவல்களுக்கு, 1800 242 845 என்ற எண்ணில் 3ஈ திட்டக் குழுவினரைத் தொடர்பு கொள்ளுங்கள் அல்லது info@3eproject.org.au என்ற முகவரியில் மின்னஞ்சல் செய்யுங்கள்.

தி ஹில்ஸ் ஹால்ராய்டு பர்ரமட்டா மைக்ரண்ட் ரிசோர்ச் செண்டர் நிர்வகிக்கிற 3ஈ திட்டத்திற்காக, ஸ்டெப்லைட் பிரை. லிட். நிறுவனம் தயாரித்த உண்மைநிலை அறிக்கை. இத்திட்டம், மின்சக்தியைத் திறம்பட உபயோகிப்பது குறித்த தகவல் உதவிகள் திட்டத்தின் (Energy Efficiency Information Grants Program) ஓர் பகுதியாக, பருவநிலை மாற்றம் மற்றும் மின்சக்தியைத் திறம்பட உபயோகித்தலுக்கான துறையிலிருந்து (Department of Resources, Energy & Tourism) நிதியுதவி பெற்றது. இங்கே வெளிப்படுத்தியுள்ள கருத்துக்கள், ஆஸ்திரேலிய பொதுநலத்தின் (Commonwealth of Australia) கருத்துக்களாக இருக்க வேண்டிய அவசியமில்லை, மேலும் இங்குள்ள எந்தவொரு தகவல் அல்லது ஆலோசனைக்கும் ஆஸ்திரேலிய பொதுநல அமைப்பு பொறுப்பேற்றுக் கொள்வதில்லை. 221112

Australian Government
Department of Resources, Energy and Tourism